Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி௵ சித்திரை௴ ௨௪ (7-5-39) { இல. 28

# தமிழாசிரியர் கதி யென்ன?

வட இலங்கைத் தமிழாசிரிய சங்கப் பொதுக்கூட்டம் சென்றமாசம் 29ம் தேதி மத்தியகல்லூரி மண்டபத்திற் கூடிச் சிக்கனசபையார் தயாரித்த கல்விப்பிரமாணத் திருத்தத்தைப் பூரணமாகக் கண்டித்ததோடு வித்தியாதிகாரசபையொன்று எற்படுத்த வேண்டுமென்றும் அச்சபை அறிக்கையை வெளியிடும்வரையும் மேற்படி திருத்தங்களை ஒதுக்கிவைக்க வேண்டுமென்றும் தீர்மானித்துள்ளது. தமிழாசிரியவுலகு கல்வித்திருத்தத்தை வெறுக்கின்றதற்கறிகுறியாக பெருந்தொகையினர் குழுமியிருந்தனர். சிக்கனசபையார் இனி என்செய்வர்? ஆசிரிய உலகுக்குமாறான திருத்தங்களைக்கொண்டு வருவதனால் யாதுபயன் உண்டாகும். ஆசிரியரது நல்லபிப்பிராயத்தைப் பெறாத எப்பிரமாணமும் நற்பயனை விளைவிக்காது என்பதைச் சிக்கனசபையார் உணர்வார்களாக.

## இனிச் செய்யவேண்டியது.

ஆசிரியர் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஆசிரியர்கள் பிரதிநிதிமூலம் வித்தியாசங்கத் நிறைவேற்றிவைக்க முயலல் வேண்டும்.

## பிரதிநிதி

ஆசிரியரைப்பெரிதும் பாதிக்கும் கல்வித் திருத்தத்திற்குச் சார்பாக ஆசியர்கள் பிரதிநிதியாகிய திரு. J. C. அமரசிங்கமவர்கள் வாக்குக்கொடுத்தது ஆசிரிய உலகத்தில் ஓர் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. திரு. அமரசிங்கம் அவர்கள் எதற்காகக் கல்வித்திருத்தத்திற்குச் சார்பாக இருந்தாரென்பது ஒருவருமறியாத மந்திரமாகவிருந்தது. பொதுக்கூட்டத்தில் திரு அமரசிங்கம் ஒரு சிறிது மந்திரத்தின் இரகசியத்தை வெளிப்படுத்தினார். பதிவதற்கு ஆயத்தமாக ஒருதொகைப்பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவென்றும், கல்வித்திட்டத்தை அங்கீகரியாதுவிடின் பள்ளிக்கூடங்கள் பதியப்படமாட்டாதென்றும் சிக்கனசபையாரும் பிறரும் கூறியதே அத்திட்டத்துக்கு சார்ப்பாக இருந்தமைக்குக் காரணமென்றுங் கூறினார். உபாத்தியாயர்கள் பிரதிநிதியென்பதை திரு. அமரசிங்கமவர்கள் பூரணமாக மறந்து விட்டார். பாவம்!

ஒருபோது திரு. அமரசிங்கமவர்கள் தமது மனச்சாட்சிக்கேற்றவாறு வாக்குக்கொடுத்திருக்கலாம். வட இலங்கைத் தமிழாசிரிய சங்கப்பிரதிநிதியின் மனச்சாட்சி ஆசிரியர்களுக்கு கெடுதி விளைக்குமாயின் அவர் ஆசிரியர்களது பிரதிநிதியாவது எப்படி? அவருடைய மனச்சாட்சி ஆசிரியசங்கத்துக்கு மாறாகப்போகுமாயின் அவர் ஆசிரியசங்கத்தை விட்டு நீங்குதல் பொருத்தமாகும்.

## திரு. சுவாமிநாதரும் ஆசிரியர் பிரதிநிதியும்

திரு அமரசிங்கம் செய்தது தவறு என்பது சர்வ அங்கீகாரமாகும். இது இவ்வாறிருக்க முழுப்பூசனிக்காயைச் சோற்றிற்புதைக்க எத்தனித்தாற்போலத் திரு. சுவாமிநாதனவர்கள் திரு. அமரசிங்கத்தைப் பற்றிப்பின் வருமாறு கூறினார்.

"திரு. அமரசிங்கமவர்களுக்கும் மனச்சாட்சி இருக்கின்றது. அதைத் தெரிவிக்கும் உரிமை அவருக்குண்டு என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள்."

இரண்டாயிரம் உபாத்தியாயர்கள் தெரிந்து திரு. அமரசிங்கத்தை அனுப்பியது உபாத்தியாயர்களது எண்ணத்தை அறிவிக்கவோ அல்லது அவர் தமது எண்ணத்தை அறிவிக்கவோ என்பது திரு. சுவாமிநாதருக்கு அறியாததொருவிஷயமன்று. தமிழாசிரிய உலகம்விழித்துவிட்டது. தந்திரங்கள் சூழ்ச்சிகள் இனிப்பலிக்காது என்பதை ஆசிரியர் தலைவர்கள் அறியக்கடவர். படித்தவர்களென்று எண்ணித் தமிழாசிரியர்கள் ஆங்கில உபாத்தியாயர்களைத் தலைவர்களாகவும் பிரதிநிதிகளாகவும் நியமித்திருக்கின்றனர். அவர்கள் வைத்த நம்பிக்கைக்கு மோசஞ்செய்யாது தமிழாசிரியர்களது நன்மைகளுக்கு உழைக்கவேண்டியது அவர்கள் கடனாகும்.

## மே மீ 12ம் தேதி

மே மீ 12ம் தேதி சகலமும் முடிவாகும். அன்றையதினம் வித்தியாசங்க அங்கத்தவர்கள் எல்லாரையும் உபாத்தியாயர்களுக்குச் சார்பாக வாக்குக்கொடுக்குமாறு செய்யும் வழிவகைளை ஆராய்ந்து செய்யவேண்டியவற்றைச் செய்து ஆசிரிய உலகம் முன்வர வேண்டும்.

---

உருவிருப்ப வுள்ளேதான் ஊறும் மலக்கேணி, அருவருப்பு வாழ்க்கையைக்கண் டஞ்சுநாள் எந்நாளோ.

கல்முனை விடுமுறைக் கழக உபந்நியாசம்—3

# " இலக்கியங் கற்றலும் இலக்கியச் சுவையி லீடுபடலும் "

[மட்டக்களப்புத் தென்பகுதி ஆசிரியர் விடுமுறைக் கழகத்தின் முன்னிலையிலே ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர் அவர்கள் கூறிய விரிவுரை.]

(முற்றொடர்)

"கோமடந்தை களிகூரப் புகழ்மடந்தை
  குளிகூரக் கொற்றவிந்தை
மாமடந்தை களிகூர மணவினையொப்
  பனைக்குரிய மடந்தைமார்கள்
பூமடந்தை யனையாளைப் பூட்டியவெண்
  டாளமணிப் பூண்களாலே
நாமடந்தை நிகராக்கி நாயகன்றன்
  வலப்பாக நண்ணுவித்தார்"

மணவினை நிகழ்ந்தபின்னர் ஒத்த காதலராகிய அவ்விருவரும்,

"நோக்கியகண் ணிமையாம னோக்கி நோக்கி
  நண்ணியமென் புலவியிலே நொந்துநொந்து,
தேக்கியசெங் கனியிதழா ரமுதுண் டுண்டு
  சேர்த்தியகைந் நெகிழாமற் சேர்ந்து சேர்ந்து
தூக்கியபொற் றுலையினது ராக மேன்மேற்
  றொடாவரும் பெரும்போகந் துய்த்தார் முன்னைப்
பாக்கியம்வுந் திருவருக்கும் பலித்த தல்லாற்
  பாயனலத் திப்படியார் பயன்பெற் றாரே"

எனக் கவிகூறிச் செல்கின்றார்.

இனிப் போர்க்களத்திலும், பூஞ்சோலையிலும் யாம் கண்ட காட்சிகளை ஒப்பவைத்து நோக்கி இலக்கியச் சுவை எத்தகையது என ஆராயப்புகுவாம்.

போர்க்களத்திலே பெருமிதச்சுவை தலையாய சுவையாகி நிற்கும். செயற்கருஞ்செயல்களைக் கண்டு இறும்பூதெய்தும் உள்ளத்திலே மருட்கையென்னுஞ், சுவை தோன்றும். எள்ளிநகைக்கின்ற நகையும், அசைவுகண்டிரங்கும் அவலமும், பகைமேற் செல்லும் வெகுளியும், இகழ்ந்துரைபாடும இளிவரலும், அஞ்சத்தக்கன கண்டுழி நிகழும் அச்சமும், வெற்றியா லெய்திய உவகையும என ஏனைய சுவைகளும் போர்க்களத்திலே தோன்றுதற்குரிய.

பூஞ்சோலைக் காட்சியினுள்ளே "காதலிருவர் கருத்தொப்ப ஆதரவுபட்ட உவகையும்" இனிய நகையும் வியப்பின்பாலதாகிய மருட்கையும், பிரிவுநோக்கிய அச்சமும், பிரிவாலெய்திய அவலமும் பெருவரவின் பொருள் குறித்தெழுந்த சுவையினுல மாத்திரமன்று. பாவினகத்து எழுத்துக்கள் அமைந்துநின்ற தாளவிகற்பங்களினாலும் கவிஞர் தமது உள்ளக்குறிப்பினை வெளிப்படுத்துவர்.

"வளவன்பதி முதலாக வியங்கும்பதி தோறும்
  துளவங்கம ழுதிசீதள தோயங்கள் படிந்தே
இளவண்டமி ழெழுதேடுமுன் னெதிரேறிய துறைசூழ்
  தளவங்கமழ் புறவஞ்செறி தண்கூடல் புகுந்தான்"

என்னுஞ் செய்யுளின்பின்,

"குன்றிளிள வாடைவரும் பொழுதெல்லாம்" என்னுஞ் செய்யுள் வருகின்றது. இடையின வெழுத்துப் பயின்று மெல்லென்னு நீர்மையாகிநிற்கும் "துளவங்கமழுதிசீதள தோயம்", "இளவண்டமி ழெழுதேடு", "தளவங்கழம் புறவம்" என்னுஞ் சொற்றொடர்களின் நயத்தை நோக்குக.

தண்ணென்னும் நீர்த்துறையினையும், முல்லைமலர்களின் நகையினையுங் கண்டு இறும்பூதெய்தி நிற்பேமிடையே இளவாடைக்காற்றும், மலயத்துதித்த மந்தமாருதமும் வருதல்போல அடுத்த செய்யுள் வருகின்றது.

தனதந்தன தனதந்தன தனதந்தன தான என்னுஞ் சந்தத்தின்பின்னர், தந்தான தனதான தனதந்த தனதான தனன தான "வண்டானந் திரிபொழிலில் வரிவண்டினம்பாட மயில்களாட"

என்னுஞ் சந்தந் தோன்றித் தென்றற் காற்றினையும், வசந்த காலத்தையும் நினைவூட்டி உவகையளிக்கின்றது.

பதினெட்டாம் போர்ச் சருக்கத்திலே துரியோதனனும் வீமனும் கதாயுத்தஞ் செய்யும் வேளையிலே வீமன் மரபு தவறித் துரியோதனனைத் தொடையிலடித்ததைக்கண்ட பலராமன் வெகுண்டெழுதலையும் கண்ணபிரான் இடைநின்று விலக்குதலையும் கூறுகின்ற பாகத்திலே செயல்விரைவினை நோககிச் சந்தமானது ஒவ்வொரு பாடலிலும் விகற்பித்துச் செல்வது உளங்கொண்டு உவப்புறுநீர்மையது.

1. தந்த தானன தானன தானன
2. தனதனத் தனத்த தானதன
3. தனனதன தான தானன தானன
4. தனனு தனனு தனனு தனனு
5. தந்தன தனன தனன தானன
6. தத்த தனதன தத்தன தானன
7. தந்த தானன தானன தானன
8. தனதந்த தானன தானன தானன
9. தான தனனதன தானதன தானதன
10. தனன தனனதன தந்த தானன
11. தனத்தன தனதன தானன தானன
12. தனதன தனத்தன தந்ததா னந்தன
13. தனத னத்தன தனதன தானன
14. தானன தனந்தன தனன தானு தனன

என வேறுபட்ட சந்தங்களினாலே அப்பாடல்கள் நடக்கின்றன.

இனி, "நோக்கிய கண்ணிமையாமல்" என்னுஞ் செய்யுளினுள்ளே "நோக்கி நோக்கி", "நொந்து நொந்து", "உண்டு உண்டு", "சேர்ந்து சேர்ந்து" என்

மெய்விசு நாற்றமெலாம் மிக்கமஞ்ச ளால்மறைத்துப், பொய்விசும் வாயார் புலையொழிவ தென்னாளோ.

னும் மடக்குகள் எத்துணை யழகொடு பொருந்தி நிற்கின்றன.

"கோமடந்தை களிகூர" என்னுஞ் செய்யுளிலமைந்த மடக்கினையும் நோக்குக.

"கண்ணினுஞ் செவியினுந் நண்ணிநி னணரும் உணர்வுடைய மாந்தரா" கிய கவிகளுக்கு இயற்கையிலுள்ள அற்புதக் காட்சிகள் தத்தங் கருத்தினை வெளியிட்டுரைக்கும். திரௌபதியினது சுயம்வர மண்டபத்தினை நாடிப் பஞ்சபாண்டவர் செல்கின்றனர். இளவேனிற் காலத்துக் குயிலினோசை அவர் செவிப்படுகின்றது; அக்குயில் என்ன செய்தியுரைத்தது என்னுமுண்மை கவிக்குப் புலப்படுகின்றது.

"மாக்குர லழக வல்லி வதுவையி லழகு காணத்
தாக்குர வடிகொள் யானைத் தரணிப ரெவரும் வந்தார்
வீக்குகள் மிளிர்பொற் பூணீர் விரைவுடன் வம்மி னென்று
கூக்குரல் விளிப்ப போலுங் கோகிலக் குரலுங் கேட்டார்"

ஓசையுஞ் சுவையும் ஒத்து நடப்பதற்கு எடுத்துக்காட்டாக இச்செய்யுளையும் நோக்குக.

"பூபால ரவையத்து முற்பூசை
பெறுவார் புறங் காணில்வாழ்
கோபால ரோவென் றுருத்தங்
கதித்துக் கொதித் தோதினன்
காபாலி முனியாத வெங்காம
னிகரான கவி னெய்தியேழ்
தீபால டங்காத புகழ்வீர
சயமன்ன சிசு பாலனே"

இதன்கணமைந்த வெகுளிச் சுவையை நோக்குக.

"உருத்தங் கதித்துக் கொதித்தோதினன்" என வல்லொற்று மிக்கு வருவது இச்சுவைக்கு மிகப் பொருத்தமுடையதாகும்.

"வாரடா வுனக் கியாதா னூர்தம்
மகளீக்குமோ வானமாதர்தோன்
சேரடா மலைந் துயிரை மெய்யினைத்
தின்றதேவரூர் சேருவிப்பன்யான்
போரடா தன்னொ டாளி யேறபுன்
பூனைதன்னுடன் பொரநினைக்குமோ
பாரடாவெ னுண் மையை யரக்கர்கைப்
பட்டபோதில்யார் பாரில்வைகினர்"

இடிம்பன் கூற்றாகிய இப்பாடலினும் வல்லொற்றுமிக்கு வருதலை நோக்குக.

"கரியணிக்குளெக் கரிகள்புண்படா
கடவுதேரிலெத் தேர்கலக்குறா
பரியணிக்குளெப் பரிதளிப்புறா
பாகர்தம்மிலெப் பாகர்வீழ்கலார்
நரனும்வெற்றிகூர் வசவுமுற்றபோர்
நவிலுமீற்றினும் நாடுக்குமால்
இருசனத்தினும் இருவரம்பினும்
எவனுநிகரே ரெக்தமன்னரே"

என்னுஞ் செய்யுளையும் நோக்குக.

வாளபிமன்னு பட்டபின்னர்க் கடோற்கஜன் கூறிய இவ்வுரையை நோக்குக.

"இருவரெதி ரெதிர்தம்மி லிகல்பொருத
லுலகியற்கை யாருங் கூடிப்
பருவமுறாத் தனிச்சுதலைப் பாலகனுக்
காற்றுமற் பறந்து போவீர்
ஒருவனெடுந் தோளிக்க ஒருவன் மலர்க்
கைதணிக்க வொருவன் பின்னைப்
பொருவனென வறைகூவிப் பொன்றுவித்தா
னிதுகொண்டோ புகல்கின் றீரே"

"வரைக்குவமை பெறுதடந்தோள் வீமன்மக
னிப்படியே மதியா னுநி
உரைக்குமொழி கேட்டிருந்த வரகமணி
கொடிவேந்த னுருத்து நோக்கி
இருக்குமொழி யவைகக்கேற் வியம்பாமற்
றன்மதத்தா லியம்பு கின்ற
அரக்கிமக னுடனென்றுஞ் சழிதேவென்
றனனிருந்த வரசர் யார்க்கும்"

"அந்தவுரை மீண்டவன்கேட் டரக்கவனே
நகைத்துரைப்பா னரக்க ரேனுஞ்
சிந்தையில் விரகென்னுர் செருமுகத்தில்
வஞ்சகமுஞ் செய்யா ரையா!
வெந்திறல்கூர் தினவருக்கு விடமருந்தார்
கிளைக்கழுவில் வீழச் செய்யார்;
வந்தபுன லிடைப்புரையா ரோருநரி
விருப்பகற்று ருரையிற் தப்பார்"

"செழுந்தழல்வாழ் மனைக்கொளுவார்; செய்ந்நன்றி
கொன்றறியார்; நிங்கு பூணார்;
தழுந்தமனத் தழுக்குறு ரச்சமற்
றருளின்றிப் பொய்ச்சூ தாடார்;
கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கான
மடைவித்துக் கொல்லி வொண்ணார்;
எழுந்தமரின் முதுகிடா ரிவையெல்லா
மடிகளுக்கே யேற்ப வென்றான்"

இப்பாடலிலே நகையும் இளிவரலும் தோன்றி நிற்கின்றன.

"நின்றனையே யெனைக்காத்து நீயேகென்
றியானுரைப்ப கெடுத்தே ரூர்ந்து
சென்றனையே யிமைப்பொழுதிற் றிகிரியைப்பு
முடைத்தனையே தெவ்வ ரோட
வென்றனையே சுயோதனன்றன் மகவுடனே
மகவனைத்தும் விடங்கா வம்பிற்
கொன்றனையே நின்னுண்மை மீண்டொக்கக்
கூசினையோ குமர ரேறே"

இதனுள் அவலச்சுவை தோன்றுகின்றது. மன்னைக் காஞ்சிச் செய்யுளுள்ளே "னகர" மெய்பெருவாரியாற்றலை நோக்குக.

(தொடர்ச்சி 222-ம் பக்கம் பார்க்க)

திண்ணியநெஞ் சப்பறவை சிக்கக் குழற்காட்டில், கண்ணிவைப்போர் மாயங் கடக்குநாள் எந்நாளோ.

# அதிஷ்டமுள்ள விறகுவெட்டி

V. K.

அவன் சீவியம் இந்தக் கோடரியினுற்றுன். இந்தக் கோடரியைக் கைதவற விட்டுவிட்டால் அன்றேடே அவனது சீவியம் நின்றுவிடும். நாள் முழுவதும் கஷ்டப்பட்டாற்றுன் அணு இரண்டு கிடைக்கும். எத்தனையோ பேரெல்லாம் உலகில் சுகமாய்ச் சீவிக்க நான் மாத்திரம் இவ்வாறு கஷ்டமுறுகிறேனே என்று துக்கித்துக்கொண்டே விறகு வெட்டிக்கொண்டிருந்தான்.

திடீரென்று சோனுவாரியாய்ப் பெய்தது மழை. அவன் மரத்தை விட்டிறங்கி ஓடினுன். வழியிற் கண்டான் ஒரு புது மாளிகையை. மழைக்குத் தங்கலாமென உள்ளே சென்றுன். சொக்கட்டான் ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தனர் இரு யௌவன புருடர்கள். அவர்களில் ஒருவர் ஆபரணுதிகளையுடையவராயிருந்தார். மற்றவர் அழகு வாய்ந்தவர். ஏழை விறகுவெட்டி, நகையணிந்தவர் பக்கத்திலே போய் நின்றுன். அவர் ஓர் மாணிக்கக் கல்லைக் கொடுத்து, நீ இதனைக் கொண்டு போய்ப் பிழை என்றுர். அவன் இதென்ன நெருப்பு நிறமாயிருக்கிறதே; ரூபா ஒன்று கொடுத்தாரில்லையே என்று தனக்குள்ளே யோசித்துக்கொண்டு, நம்ம பெண்டாட்டி அடுத்தவீட்டிற்குப் போகவேண்டிய அலுவல் இனறேடே நின்றுவிட்டதென்று நினைத்து அதனைக் கவனமாய்க் கொண்டுசென்றுன். வழியில் ஓர் ஆறு; கடக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது; விழுந்துவிடுமோ என்ற பயம் ஒரு பக்கம்; திறப்பதும், மூடுவதுமாயிருந்தான் ஏழை விறகுவெட்டி. பாவம், நழுவி விழுந்துவிட்டது ஆற்றில். மூழ்கிப் பார்த்தான்; அகப்படவில்லை; ஒரே துக்கம்; வீடு வந்து சேர்ந்தான்.

மனைவி :- இன்றைக்கு ஏது இவ்வளவு நேரமாச்சு?

வி. வெ :- மழை பெய்தது தெரியாதா? காட்டிலே கட்டையெல்லாம் நனைஞ்சுபோச்சு.

மனைவி :- மழை எங்கே பெய்தது? 'பொய் சொன்னுலும் பொருந்தச் சொல்லப்பா'

வி. வெ :- போடி, காட்டிலே பெய்தது. ஒரு வீட்டிற்குப் போனேன். அங்கே ஒருவர் கல்லு ஒண்ணு கொடுத்தார். அது என்னமாதிரி எறிச்சுது தெரியுமோ?

மனைவி :- காட்டு பார்க்கலாம்.

வி. வெ :- 'அது வருகிற வழியிலே ஆறு விழுங்கிவிட்டது.

மனைவி :- இது பொய். எங்கே சல்லி?

வி. வெ :- சல்லி ஏது, ஒரு தம்பிடிகூடக் கிடையாது. கட்டை வெட்டலையே. இருவரும் சிவ சிவ என்று சிவ பட்டினி.

இவ்வாறு தினங்கள் பத்துக்கழிந்தன. ஈஸ்வரனை நினைத்து வருந்திக்கொண்டே சென்றுன். அவனுக்கு அகப்பட்டது ஒரு தங்கமாலை. அளவற்ற சந்தோஷம்; நீங்களே ஒருமுறை யோசித்துப் பாருங்கள் அவனின் சந்தோஷத்தை. இதைப் பத்திரமாய்க் கொண்டுபோய் விடவேண்டுமென்று திட்டம் போட்டான். தனது கழுத்திலே போட யோசித்தான். தலையோ பெரிய உருப்படி. மாலை தலையிலே நின்றுவிட்டது. யாருங் காணுதபடி இடுப்பிலிருந்த கந்தையைக் களற்றி அதனை மூடித் தலைப்பாகையாக வைத்துக்கொண்டான். வீட்டிற்குச் செல்கிறுன். கருடனென்று இதனை அபகரித்துவிட்டது பாவம். புறு புறுத்தபடியே இல்லஞ் சென்றுன். எடு சல்லி அரிசி வாங்க என்றுள் சுந்தரி. அவனுக்குக் கோபம் பொங்கி வழிந்தது. சிவபட்டினி.

நாட்கள் பல சென்றன. காட்டில் அவன் விறகு வெட்டியபடியே எம்பெருமானை நினைந்து அழுதான். உடனே மழை சோனுவாரியாய்ப் பெய்தது. ஓர் வீட்டிற்கு ஓடினுன். பெரிய மாளிகை. உப்பரிகைகளைக் கொண்டது. அதுதான் லோபி தம்பையரது இல்லம். கடுகளவு மீயாத கன்னெஞ்சமுடையவர். அன்றைக்கு விறகு வெட்டியின் நிலையைக் கண்டு அவருக்கு அருள் சுரந்தது. மனைவி கட்டிவைத்த சாமிப் பையென ஓர் பையைத் தூக்கிக் கொடுத்தார் தம்பையர். விறகு வெட்டி நில்லாமல் ஓடினுன். அப்பாற் சென்று அவிழ்த்துப் பார்த்தான். பைக்குள் சவரன்கள் இருந்தன. கறுப்பன் ஒரே ஓட்டமாய் ஓடிவந்து இல்லஞ் சேர்ந்தான். மனைவியைப் பார்த்தான் காணவில்லை. விறகு வெட்டியல்லவா? அடுப்பைக் கிளறி அதன் சாம்பருக்குள் புதைத்துவிட்டான் பையை. மனைவியும் வந்தாள். அடுத்த வீட்டுச் சின்னச்சி வந்து நெருப்புத் தரும்படி கேட்டாள். நீயே, போய்ப் பார்த்து எடுத்துக்கொள்ளென விறகு வெட்டியின் மனைவி கூற அவள் கிளறிப் பையை எடுத்துச் சென்றுவிட்டாள். ஏழைக் கறுப்பன் பட்ட இம்சைக்கோ அளவின்று. 'கைக்கெட்டியது, வாய்க் கெட்டவில்லையே' எனத் துயருற்றுன். "எண்ணுத எண்ணமெலாம் எண்ணி எண்ணி ஏழைநெஞ்சம் புண்ணுகச் செய்ததினிப் போதும் பராபரமே" என்று பராபரக் கண்ணி கூடப் பாடத் தொடங்கிவிட்டான்; சிவபட்டினி.

வாரங்கள் சில கழிந்தன். விறகுவெட்டப் போனுன். சுவாமியைப் பிரார்த்தித்தான். மழை பொழிந்தது. முதல் போன மாளிகைக்குட் சென்றுன். அழகு வாய்ந்தவர் மிகுந்த வெறுப்புடன், யாரது! அடிக்கடி வருகிறுய் என்று ஒரு கால்ரூபாய் கொடுத்தார். கறுப்பன் அதனைப் பெற்றுச் சுந்தரியிடம் கொடுக்க அவளதற்கு அரிசி காய்பிஞ்சும், மிளகாய் மீன் ஆகியனவற்றையும் பெற்றுக்கொண்டு வந்து வைத்துவிட்டுச் சாதத்தை வடித்துவிட்டு மீனையறுத்தாள். அதன் வயிற்றினுள் ஓர் மாணிக்கக் கல் இருந்தது. அவள் அதனைக் கறுப்பனுக்குக் காட்ட இதுதானடி முதல்நாள் அவர் கொடுத்த கல் என்றுன். பிறகு இலையறுக்க மரத்திலேறினுன். அதன் உச்சியில் கருடன் கூடுகட்டி இருந்தது. அதில் பள, பளவென்று மாலை தெரியவே திருடன் அகப்பட்டான்! திருடன் அகப்பட்டான்! என்று கூக்குரலிட்டான். அடுத்தவீட்டுச் சின்னச்சி தான் பை எடுத்துவந்தது தெரிந்துவிட்டதென்று நினைத்தாள். உடனே பையை எடுத்து வந்து தான் வினை

கண்டுமொழி பேசிமனங் கண்டுகொண்டு கைவிலையாக், கொண்டுவிடு மானார்பொய்க் கூத்தொழிவ தெந்நாளோ

# கல்வி - 41

(தமிழாசிரியர் திரு. கா. இளையதம்பி அவர்கள்.

பூமியில் உயிர்வர்க்கந்தோன்றி இற்றைக்கு 30 கோடி வருஷங்களாகின்றனவென்றும், மனிதன் தோன்றி 3 இலட்ச வருஷங்கள் சென்றனவென்றும் ஸேர் ஜேய்ஸ் ஜீன்ஸ் கூறுகின்றார். இதனால், உயிர்வர்க்கத்துக்கு முன்னர் தாவரவர்க்கந் தோன்றியதென்று துணிதல்வேண்டும்: இன்றும், குளிர்மிகுந்த காலத்திலே தண்ணீர் தேங்கிநிற்கு மிடங்களிலே பாசி படர்வதையும், ஜலம் மூடாத தரையிலே காளான் முளைத்தலையுங் காண்கின்றோமே. அதுபோலவே அக்காலத்திலே ஜலந் தேங்கி நின்றவிடங்களிலே பாசியும், ஒருவகை யற்ப பூண்டு வகைகளும், காளான் வகைகளும் முளைத்திருக்கவேண்டும். காற்றாற் சலந் திரைந்தெழுந்து அலைதலால், இவ்வற்ப தாவரங்கள் கரையிலே பொதுக்கப்பட்டுக் கரையைத் தமக்கிருப்பிடமாக்கி விருத்தியடைந்தனவென்பது விஞ்ஞானிகள் கருத்து. கரையென்பது: கடற்கரையையும், நதித்தீரங்களையும், சதுப்புநிலங்களையு மென்று இங்குக் கொள்ளல் வேண்டும். அற்ப தாவரங்கள் விருத்தியடைந்து விருட்சங்களாக மாறினவென்றும், அவை வித்தினாலும் பிறவற்றாலும் பெருக்கமடைந்து காலகதியில் தரைப்பரப்பை மூடிக்கொண்டனவென்றுங் கொள்க. சில சோலைக்காடுக ளடர்ந்திருப்பதைப் பார்த்தவர்கள் இன்றும் சூரியவொளி யுட்புகாதனவாயடர்ந்த காடுகளை நதிதீரங்களிலே காண்கின்றோமே; அக்காலத்திலே காடுகள் எவ்வாறிருந்திருக்கவேண்டுமென்பதை மனபாவனை பண்ணிக்கொள்ளலாமே யென்கின்றனர். "தோன்றின மறையு"மென்ற வாதப்படி காலத்துக்குக் காலம் பூமுக வேறுபாட்டில் வந்த மாற்றத்தால் இக்காடுகள் முதுமையடைந்தும் அடையாமலும் பட்டு வீழ்ந்து தரையாலும் சலத்தாலும் மூடுண்டு பூவுதரத்து ளகப்பட்டு நிலக்கரி யென்னும் மாற்றத்தை யடைந்திருப்பதைக் காண்கின்றோமே. மத்திய ஆசியாவிலிருந்து தமிழர் வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவுக்குட் பிரவேசித்து இந்து கங்கா நதிக் கரைகளைத் தம் மந்தைகளின் மேய்ச்சலுக்கு உபயோகப்படுத்திய காலத்திலே அத் தேசத்தின் ஏனைய பாகங்கள் அடர்ந்த காடுகளாய்க் கிடந்தனவென்றும், பின்வந்த துரானியரும், ஆரியரும் காடுகெடுத்து நாடாக்கி வாழ்ந்தார்களென்றும் இதிகாசர் கூறுப. இதற்கு முந்தியே எத்தனையோகோடி வருஷங்கள் தாவரங்கள் தோன்றிப் பின்னுங்கிவிட்டனவென்றால், தாவரங்கள் பூமியி னுதரத்துளகப்பட்டு நிலக்கரியாய் மாறிவிட்டன வென்பதை யார் மறுப்பர்!

எத்தனையோ கோடி வருஷங்கள் சென்றதாலேயே கற்பாறைகளின் கீழகப்பட்ட தாவரமாகிய நிலக்கரியிலிருந்து வைரம் பிறந்தது. பிரான்சு தேயத்து இரசாயன சாஸ்திரியார் ஒருவர் முதன்முதலாக வைரத்தையும் நிலக்கரியையுங் காற்றிலெரித்து ஆராய்ந்ததின் பலனாக அவை கரியமிலவாயுவேயன்றிப் பிறவல்லவென்று உலகுக்குத் தெரிவித்தார். வைரம் சில பொருட்களின் சேர்க்கையால் வெண்மைநீத்துப் பச்சையாகவும் மஞ்சளாகவும் நீலமாகவும் மாறினாலும் அது கரியென்றே நிரூபித்துவிட்டார்.

பிராணிகளினுடலும், மனித தேகமுங் கரியாகவே யுள்ளனவென்பது பிரத்தியட்சமன்றோ!

உயிர்வர்க்கங்களில் எத்தனையோ இன்றைக்குங் கடல் வாழ்வனவாயே காணப்படுகின்றன. ஆதலின், ஜீவபிராணிகளின் இருப்பிடமா யாரம்பித்துள்ளது ஜலமென்றே கொள்ளல்வேண்டும். வாயுவும் நீரும் இன்றும் ஜீவ மயமாயிருக்கின்றனவே. ஆரம்பத்திலே அற்பஜீவன்கள் தோன்றிக் காலவேற்றத்துக்குத் தக்கபடி பெருகியும் விருத்தியடைந்தும் வந்திருத்தல் வேண்டும். நீந்துவன, ஊருவன, பறப்பன, நடமாடுவனவாகிய படிகளெல்லாங் காலவேற்றத்தைப் பொறுத்தனவென்றே துணிக. ஜீவிகளுடைய வுடலெல்லாம் இன்னவின்ன தாதுக்களாலானவை யென்று விஞ்ஞானிகள் துணிந்து கூறுகின்றனர். மனித தேகத்தைப் பார்த்த கண்ணாலேயே மற்றைய ஜீவிகளினுடம்பையும் பார்த்து அவற்றை யெரித்துப் பாகுபாடு செய்து இன்னின்ன தாதுக்கள் இன்னின்ன நிறைப்படி யல்லது விகிதப்படி யமைந்துள்ளனவென்று நிரூபித்துள்ளார்கள். ஆனாலுமென்! உயிரென்பதியாது? அது எங்கிருந்துற்பத்தியானது? அதனியல்பென்ன? அதனொடுக்கத்துக்குக் காலவரையறையுண்டோ வென்னும் வினாக்களுக்கு விஞ்ஞானிகள் விடையளிக்க வல்லுநரல்லர்.

சிருஷ்டிகர் காலத்துக்குக் காலம் பக்திமான்களுக்கு வெளிப்படுத்தினாரென்று மதநூல்கள் கூறுகின்றன. யாவர்க்குஞ் சம்மதமானமதமொன்றுமகிலில்லை யாதலின் யாமொன்றிலும் பிரவேசியாது நிறுத்துதும்.

யாட்டுக்கு வைத்திருந்தேன். இந்தா பை என்று கொடுத்துவிட்டாள்.

இவைகளெல்லாம் அவர் கொடுத்த கால்ரூபாயினால் வந்ததென்று அவரது நாமத்தை நினைத்து, இலைதைத்துச் சாதம் சாப்பிட்டார்கள். மறுநாள் அந்தக் கல்லைக் கொண்டுபோய், அந்த ஊர் அரசனிடம் கொடுத்து வெகுமதி பெற்றுக் காட்டை வெட்டும் தொழிலை விட்டுவிட்டுச் சந்தோஷமாய் வீடு, வாசலெல்லாம சிறப்புற அமைத்து, நகை நட்டுமாய் கறுப்பண்ணுச் சாமியாரும், சுந்தரியம்மையாருமென நாமங்களும் புனைந்து இனிது வாழ்ந்தனர்.

'அதிஷ்டம் வருவதற்கும் ஒரு நேரமுண்டு'
'காலத்தைப் பொறுத்தது அதிஷ்டம்'


ஈழகேசரி கல்வி அனுபந்தம்
தனிப்பிரதி விலை சதம் -- 3
25 பிரதிகள் விலை சதம் — 50
தபாற் செலவு வேறு
ஆண்டுச் சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது.


காபலைவா வென்றிருண்ட கண்வலையை விசும்பின்னார், நாமம் மறந்தருளை நண்ணுநாள் எந்நாளோ.

# 'இலக்கியங் கற்றலும் இலக்கியச்சுவையி லீடுபடலும்'

(219-ம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சின மஞ்சின மென்றுவி லாந்துய
ரண்டர்ப ணிந்திடவுந்
துஞ்சின மின்றென வன்பணி யின்கிளை
துன்பமு ழந்திடவும்
வஞ்ச மனங்கொடு வஞ்சக னின்றிடு
வஞ்சனை நன்றிதெனு
நெஞ்சில்வெ குண்டுல கொன்றுப டும்படி
நன்றுகி மிர்ந்தனனே"

முன்னிரண்டடியிலும் அச்சச்சுவை; பின்னிரண்டடியிலும் வெகுளிச்சுவை. வில்லிபாரதத்தினை இந்நாளில் யாம் மறந்திருக்கின்றோம். ஒரு காலத்தில் மட்டக்களப்பிலே வில்லிபாரதமானது கோயில்களிலே படித்துப் பயன் சொல்லும் நூலாக இருந்தது. ஆசிரிய வகுப்புக்கும் அஃது இன்றியமையாத பாடமாயிருந்தது. சங்கநூல்கள், காப்பியங்கள், இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம், என்றிவற்றைப் படிப்பதற்கு முன் மாணவர்கள் பாரதத்திற் பயிலலாம். அப்பயிற்சி மேலிலக்கியக் கல்விக்குச் சிறந்த அஸ்திபாரமாகும். இலக்கணச் சுருக்கமும் ஒரு சில கீழ்க்கணக்கு நூல்களும் பயின்றபின் பாரதத்னைத எடுத்துக்கொள்ளலாம்.

சந்தச் செய்யுட்களைச் செம்மையாக வாசிப்பதற்கு ஒரு சிறிது சந்தவிருத்தத்தின் இலக்கணத்தை அறிந்திருக்கவேண்டும்; தன, தான, தத்த, தந்த, எனச் சந்தக் குறிப்புகளை எழுதப் பயின்றுகொண்டாற் போதும். தெளிவுபெற வாசிக்கவேண்டும்; ஓசைக்காக ஒரு முறையும், பொருளுக்காக மற்றொரு முறையும் வாசிக்கலாம். செய்யுளிற் குறிப்பிட்ட இடங்கள், மக்கள். சந்தர்ப்பம், நிகழ்ச்சி என்றிவற்றை அகக்கண்ணு னோக்குதல் வேண்டும். செய்யுளிற் குறிப்பிட்ட பேச்சு, ஓசை யென்னுமிவற்றை அகக் காதினாற் கேட்கவேண்டும். சுவையோடு கூடிய மெய்ப்பாடு வாசிப்போரது உடலத்தில் ஒரு சிறிது தோற்றுதல் வேண்டும். உயர்குணங்களையும் செயற்கருஞ் செயல்களையும் நோக்கி உள்ளமானது உருகுதல் வேண்டும். கவி நுண்ணிதினமைத்து வைத்த அரும் பொருளின் செவ்வியை ஆழ்ந்து நோக்கிப் பாராட்டுதல் வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து உள்ளத்தின் முத்திறமாகிய அறிவு, இச்சை, துணிபு என்பன தெளிவு, இனிமை, உறுதி யென்னுங் குணங்களை மருவி, உண்மை, அழகு, நன்மை யென்னுமிவற்றி லீடுபட்டு நிற்க, கண்ணுஞ் செவியு மானந்தக் கனல்களைக் கண்டுங் கேட்டும் இறும்பூதெய்த உடல் செயலுற்றுப் பரவசபட்டு நிற்கு மெல்லையிலே வானவர் நாட்டின்பம் ஓரளவிற்கு வந்தெய்தும். ஆங்கது பற்றியன்றோ "தேவரனையர்புலவர்" என ஆன்றோர் கூறினர். "வண்டானந் திரிதடத்து" என்னும் பாடலினை ஆராய்வாம்.

நமது அகக்கண்முன்னே ஓர் அழகிய மலையும், மரங்களடர்ந்த இளஞ்சோலையும், அகன்ற தடாகமொன்றுங் காணப்படுகின்றன. சோலையகத்து இளமயில்களாடுகின்றன. தடாகத்திலே வெள்ளிய சிறையையுடைய நீர்ப்பறவைகள் திரிகின்றன. அலர்ந்த செந்தாமரை மலர் மீது ரீங்காரஞ் செய்யும் வண்டினம் படிகின்றது. மரக் கிளைகளிலே கிளிகளும், நாகணவாய்ப்புட்களும் காணப்படுகின்றன. இவ்வழகிடையே வனப்புமிக்க ஆடவனொருவனும் மடவரலொருத்தியும் ஒருவரையொருவர் வியப்போடு நோக்குகின்றனர். இம்மடவரலது கண்கள் கயல் மீனினை வென்ற தோற்றத்தை யுடையன. இக்காட்சியினாலே பற்றப்பட்ட அக்கண்பிறிதொன்றினை நோக்காது குறித்த காட்சியிலே படிந்து கிடக்கின்றது. வண்டுகளினது ரீங்கார வோசையும், கிளிகளும் நாகணவாய்களும் மொழியும் தமிழினோசையும், மந்த மாருதத்தின் மெல்லென்ற ஓசையும், மலையினின்று விழுகின்ற அருவியினோசையோடு கலந்து அகச்செவியை நிறைக்கின்றன. கிளியும், நாகணவாயும் சான்றோருரையினையும் முத்தமிழினையும் விளம்புகின்றன. வென்றமையினாலே பாண்டி நாடு தமிழுக்கு உறையுள் என்பதும், சான்றோர் வாழும் பழம்பதி என்பதும் உய்த்துணர வைக்கப்பட்டது. "தங்கொடிக்கயலைப் புறங்காணுங் கண்ணினாள்" என்றமையினாலே ஆங்குத் தோற்றிய மேதகவுடையாள் பாண்டிய மன்னனது செல்வப் புதல்வி யென்பது பெறப்பட்டது. அக்குமரன் என்றமையின் முருகனனைய வனப்பினையுடையான் அவ்விளைஞரேறு என்பது பெறப்பட்டது. இவ்விருவரது உள்ளமும் ஒருவழிப்பட்டு நின்றமையைக் கண்கள் தடையின்றிக் காட்டினமையின் 'இவர் தமது நோக்குப் போதுநோக்கன்று அன்புநோக்கென்பது பெறப்பட்டது உயர்குலத்துதித்தாராதலினாலே நிறையழிந்து ஒருவரையொருவர் தீண்டினாரல்லர். இவர் தம் கண்ணிணைகள் உறவாட, இருவர் மனமும் ஒருமித்தன வென்பது. என்றிவ்வழியாராயுமிடத்து இச்செய்யுளிலமைந்து கிடந்த தெளிவும், இனிமையும், உறுதிப்பாடும் உள்ளத்தை நிறைத்து மகிழ்ச்சியைத் தருகின்றன. இதுவே இலக்கியச்சுவையி லீடுபடுதலாகும்.

விசாகப்பெருமாளையரவர்கள்
இயற்றிய

அணியிலக்கணம்.

(திருத்தமான பதிப்பு)

விலை சதம் 35.

# கலிகால புருடர்கள்

இருபதாம் நூற்றாண்டு ஒரு பயங்கரமான நூற்றாண்டு என்று வானநூல் வல்லாரும், ஆராய்ச்சி நூல் வல்லாரும் சமயசாத்திர வைதிக நூல் வல்லாரும் கூறியிருக்கின்றனர். அவர்கள் கூற்றை நாம் சற்று நுண்மதியோடு கவனித்து ஆராய்வோமாயின் அது உண்மையென்றே புலப்படும். அறம் அழிந்து மறம் நிலவும் காலம் இது. நாடுகள் பலவும் மதப்பிராந்தியும் நாடு பிடிக்கும் அவாவும் உடைத்தாய் ஒன்றோடொன்று முரண்பட்டு பொருதல் செய்யும் காலமிது. நாடு உரிமையிழந்தால் மக்கள் உண்மையான நாகரிகத்தையும் புரமூன்றெரித்த புராந்தகனின் அருள் வேட்கையை நினைவுறுத்தும் பேரின்பத்தையும் மறந்து அநாகரிகத்திலும், சிற்றின்பத்திலும் நாடும் காலமிது. கொடுத்திளைக்கும் தாதாக்கள் அருகி, மறம்பல பெருக்கி உயிர் முன்னர்க் குற்றுக்ராம் போல்வார் சினேகமும், தீமையும் தலைவிரித்து தாண்டவமாடுங்காலம் இவ்விருபதாம் நூற்றாண்டு. எனவே அந்நூல் வல்லோர் இந்நூற்றாண்டைப் பயங்கர நூற்றாண்டென்று கூறிப்போந்தது ஒரு புதுமையல்ல. உண்மையான கல்வியழிந்து, தேச ஆசாரம் போய், தேசப்பற்றும், மொழிப்பற்றும், அரசியற்பற்றும் அற்றுப்போனதால் மக்கள் தம் வாழ்நாட்களை பற்பல விதமாகத் திரித்துக்கொண்டனர். பாவசண்டாளனாகிய மதுவில் இறங்கி சற்சனர் சங்கத்தை விடுத்து துர்ச்சனர் குழுவில் சேர்ந்து உய்யும்வகை தெரியாது மிரள மிரள விழிக்கும் நம் போலி மாணவர்கள் அல்லற் கடலுள் அமிழ்கின்றனர். அந்தோ? இவர்களின் பின்னை மதியிருந்தவாறென்னை? வாழ்வகை தெரியாது கோள்வகை பல சொல்லி மாழும் மானிட சென்மமே! நினக்கு புவியார்ந்திருக்கும் புராந்தகன் பல சௌகரியமான வசதிகளையும் அளித்திருக்க, அவற்றையெல்லாம் நீக்கி காமப்பிராந்தியை நீயேன் கொள்கிறாய்? நினது வாழ்வு நிசமா? வாழ்நாளைக் கூறுபடுத்தும் கூற்றுவன் வந்தக்கால் யாது செய்வாய்? நின்னால் ஒன்று மாகாதே. தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங் கூத்தன் புறப்பட்டக்கால் நின் யாக்கை எத்தன்மைத்தோ? மானிடனே! மாயவாழ்வு இவ்வாழ்வு. நீ இவ்வாழ்வைச் சதமாக எண்ணாதே. எண்ணுவீராயின் இம்மாய வாழ்வைப் பரம்பொருளாக எண்ணி அவிழ்த்துவிட்ட காளைமாடுபோல நிரந்தரமாகத் திரிந்த குறும்பனின் கெட்ட வாழ்வைக் கேளுங்கள்:—

குறும்பனென்பவன் ஓர் பலமான பேர்வழி. இருபது வயதுதானிருக்கும். பரட்டைத் தலையன். கவிமுகம், கார்நிறத்தன். அன்னோன் செய்யும் குறும்புகள் இம்மட்டு அம்மட்டல்ல. டாம்பீக விடயங்களில் தலையிட்டு நல்லோரையெல்லாம் கஷ்டப்படுத்துவான். ஆறு செல்வோரை இடைமறித்து கரணலீலைகள் புரியும் காமாந்தகன்; வெய்யன். இன்னோன் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு போன்ற பல துட்டர் குழுவில் சேர்ந்தான். துட்டரும் துட்டரும் கூடினால் அப்பால் அவர்களின் நடக்கையைக் கூறவேண்டுமோ? அவர்களின் கூட்டுறவு வளர்மதிபோல் பெருகியது. அதர்மம் காலெடுத்தது. அதர்மத்தை ஆதரிப்பான் போல் ஒரு சங்கத்தைக் கூட்டினர். அதற்கு "வடுகர் சங்கம்" எனப் பெயரிட்டனர். அதில் பணம் சேர்ந்தது. அதைக்கொண்டு தினம் ஒரு டாக்கி; தினம் ஒரு தவறணை; தினம் ஒரு களவு; தினம் ஒரு கலகம். அந்தோ! 'இத்துட்டர்களால், காமாந்தர்களால், நாடு குலைந்தது. சனங்களின் கஷ்டம் அதிகரித்தது பாலன முதன் விருத்தன் ஈறுகவுள்ள மக்கள் யாவரும் மிடியால் வருந்திமடியாய் இருந்தனர். வாழ்வகை தெரியாது வாளாவிருந்தனர் சில மக்கள். அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நிறுத்துவான்போன் அன்னோரை அழிக்க சுற்றம் நோக்கி இருந்தனர் சில மக்கள். இதற்கிடையில் சில நாட்கள் பயங்காரத்துடன் ஓடியொழிந்தன. "கூடினேமே கூடினேமே மச்சான் கூண்டுவண்டிக் காளைபோலே" என்று தட்டிப்பேசும் வடுகர் சங்கத்தாருக்கு அழியுங் காலம் நெருங்கிவிட்டது. ஊரார் எல்லாரும் நாலாபக்கங்களிலும் இவர்களை அழிப்பதற்குக் காத்திருந்தனர். இதையெப்படியோ அறிந்தார்கள். அக்காமந்தகர்கள் உடனே சபை கூடியது. அப்போது சபைத்தலைவர் குறும்பன் பின்வருமாறு பேசினார்.

"எனது அன்பார்ந்த சோதரர்காள்! உயிருக்குயிராயிருக்கும் அன்புடைநண்பர்காள்! கடவுள் என்று ஒருவர் இல்லை. நாங்களே கடவுள், எங்களாற் செய்ய முடியாத காரியம் ஒன்றுமில்லை. யாதுவரினும் பின்னிடாது நின்று மலையுங்கள். பாவம் பழி வாராதீர்கள். எவராயினும் உங்களில் முட்டுவார்களாயின் உடனே அவர்களை வதையுங்கள். இராசாங்கம் எங்கை அசைக்கமுடியாது. அசைத்தாலும் பிடுங்கமுடியாது. உங்களுக்கு வேண்டிய ஆயுதங்களைத் தயார் பண்ணுங்கள்! தயார் பண்ணுங்கள்" என்று கூறி முடிந்ததும் மட்டைகளால் வரிந்த பீடத்தில் வீழ்த்தி விட்ட மரம்போல் தொப்பென இருந்தார். அப்போது சபைக்கு முன்னால் பெருங் கூக்குரல். வெள்ளம்போல் சேனைகள் நிற்கின்றன.' எள் விழ இடமில்லை. வடுகர் சங்கம் நிலைகுலைந்தது. மதுஇராட்சதன் வழங்கப்பட்டான். எல்லார் கையிலும் ஒவ்வோர் துப்பாக்கி, சண்டை நடக்கிறது. களிறோடு களிறு முட்டிப் பொருதியது போல் இருக்கிறது. அவர்கள் சண்டை அப்போது பிரமதேவன் எட்டிப் பார்த்ததும் திகைத்துப் போய்விட்டான். ஒருவேளை இராம இராவண யுத்தமோ என்று கூட எண்ணினான். எண்ணினான் யாரோ ஒருவரை பார்த்துத் திரிவதாக தெரிந்தது. யார் தெரியுமா? அவர்தான் கம்பர். கம்பர் இருந்தால் நேரில் கண்டு பாடியிருப்பாரே என்று நினைத்து தேடிக்கொண்டிருக்கையில் யுத்தம் முடிந்தது. ஆனால் குறும்பனைக் காணவில்லை. மற்றத் துட்டர்கள் எல்லோரும் கரமிழந்தோர்; காலிழந்தோர் சிலராக ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்கள். குறும்பன் என்பவன் முன்வாய்ப் பாதிப்பல்லில்லாமல் தாய்தந்தையரால் வெறுக்கப்பட்டு காளைமாடுபோல் திரிவதாக ஓர் வதந்தி உலாவுகிறது.

ஆ. நன்னித்தம்பி
(சந்தாஎண் 246)

---

விகசித தளர்த்து விழுப்புகையார் பேசுவிழ்ந்து, தூக்குமதன் சோம்பைத் துடைக்குநாள் எந்நாளோ.

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

அருமைக் குழந்தைகாள்!

தாத்தாவுக்கு இந்த வாரம் அவசரத் தந்திகள் பல வந்திருக்கின்றன! சென்றவாரம் தாத்தா ஒன்றும் எழுதமுடியாமல் போனது பற்றித்தான் விசாரித்து இந்தத் தந்திகள் வந்தன. உண்மையில் பேரன்பேத்திகளுக்கு தாத்தாமேல் பிரியந்தான்!

சென்ற வாரம் பத்திரிகாசிரியர் ஒரு சுற்றுப்பிரயாணத்தில் கிளம்ப உத்தேசித்திருக்கிறார் என்ற செய்தி எப்படியோ தாத்தாவின் காதிலும் விழுந்தது. நானும் அவரோடு சென்று எங்கள் பிறவூர்ப் பேரன் பேத்திகளையும் பார்த்து விட்டு வரவேண்டுமெனறு ஆவல்; ஆனால் அதிபர் இதற்கு மறுத்துவிட்டார்! தாத்தா கிழவராம்; தள்ளாத வயதில் எங்கேயாவது வழியில் தவறி விழுந்துவிட்டால் யார் தூக்கிவிடுவது? என்று தாத்தாவைத் தனியே விட்டு விட்டு அந்த இரக்கமற்ற மனுஷர் கிளம்பிவிட்டார். ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள், என்று தாத்தா அந்தவாரம் எதுவும் எழுதுவதில்லை என்று போய் வீட்டில் உட்கார்ந்து விட்டார்!

ஆனால் ஆத்திரத்தில் இரத்தம் சூட்டுப் போய்க் காச்சல் பிடித்துவிட்டது! பேரன் பேத்திகள் கோபமோ என்னவோ?

இப்பொழுது எல்லாம் சுகமாகிவிட்டது. பத்திராதிபரும் திரும்பிவந்து சமாதானம் பேசிவிட்டார்!

மகாநாடு 20-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒருவரும் மறந்து போகவேண்டாம். காலையில் பேச்சுப்போட்டி நடைபெறும். இதில் கலந்து கொள்ள விண்ணப்பப் பத்திரம் அனுப்பிய அங்கத்தவர்கள் முதல் தேர்தலுக்கு இம்மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வண்ணார்பண்ணை விவேகானந்த வித்யாசாலை மண்டபத்தில் வந்து கூடும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இந்த முக்கியமான அறிக்கையைக் குறித்து விண்ணப்பதாரிகள் கவனிப்பார்களாக. இந்தப் 'பரீஷையில் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒரு தொகையினரே மகாநாட்டிலன்று போட்டியிற் கலந்துகொள்ள விடப்படுவர்.

—தாத்தா.

தாத்தா பதில்

R. K. சண்முகம் (223) — தம்பி, பதில் எழுதவில்லை என்று கோபித்துக் கொள்ளாதே. உமது கடிதங்கள் யாவுங்கவனிக்கப் படுகின்றன; 'கல்விமலர், வாழ்த்துப் பெற்றோம். விண்ணப்பங்களும் படமும் கிடைத்தன.

ஆ. நன்னித்தம்பி. உமது விஷயம் பிரசுரிக்கப் படுகிறது. ஆத்திரப்பட்டால் ஒன்றும் நடந்துவிடாது. எதற்கும் ஒவ்வொருவரும் தங்கள் முறை வரும்வரையும் காத்திருக்க வேண்டாமா?

க. சுப்பிரமணியம் (256) திகதியாவது சந்தா எண்ணாவது குறிப்பிடாமல் கடிதமெழுதினால் நாம் அதை எப்படிக் கவனிக்க முடியும். உம்முடைய பெயருள்ளவர்கள் அநேகரிருக்கின்றனர். கல்வி மலருக்கு இத்தனை விஷயங்களுமேன்?

பொ. சிவஞானம் (1) உமது விஷயமிருக்கிறது. விஷயங்கள் பல இருப்பதால் இவைகளில் தெரிந்து உசிதமானவையே பிரசுரிக்கப்படும். மற்றவைகள் பின்வரும் கல்வி அனுபந்தங்களில் இடம் பெறும்.

கோ. பொன்னுச்சாமி (228) வே. தணிகாசலம் (229) இவர்களிருவர் பெயரும் தவறுதலாக முன் வெளிவந்த இதழில் கோ. பொன்னுத்துரை என்றும், வே. தணிகாசலம் என்றும் பிரசுரிக்கப்பட்டு விட்டன.

மா. குகராசா (199) பேச்சுப்போட்டியின் பின் குறிப்புரை கூற நேரம் வராது.

க. சுப்பிரமணியம் (253) சந்தா எண் குறிப்பிட்டே கடிதமெழுத வேண்டுமென்பதைக் கவனிக்க. மகாநாட்டிற் கனுப்பிய பணம் வந்து சேர்ந்தது.

அ. ஜயேந்திரன் (132) பத்திராதிபர் உங்கள் வீட்டுக்கு வந்ததாகச் சொன்னார். தாத்தாவுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை. ஆவணிமாதம் யாழ்ப்பாணம் வந்தால் கட்டாயம் என்னைப் பார்க்கவும். உமது கட்டுரையும் படங்களும் நன்றாயிருக்கின்றன. கட்டாயம் பிரசுரிக்கின்றேன். நல்ல வேளையாகத் தபால் கந்தோர் ஆசாமிகளிடம் பிடிபடாமல் தப்பிக் கொண்டீர்! இவ்வளவு துணிகரமாக அந்தக் கால் ரூபாய் வந்து சேர்ந்ததே! ஆனால் இனிமேல் அப்படிச் செய்து போடவேண்டாம்! தம்பி மகேந்திரனுக்கு எங்கள் அன்பைத் தெரிவிக்கவும்.

அ. இந்திரவதி (131) தாத்தா தம்மைக் காட்டிக் கொள்ளாததற்கு அவ்வளவு கோபமா? அப்படியெல்லாம் கோபித்தால் எனக்கு கண்ணீர் வந்து விடும்! எப்பொழுதாவது ஒரு தடவை நீங்களெல்லாம் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பமேற்படும். வருஷப்பிறப்புப் பலகாரம் சாப்பிட எங்கள் பத்திராதிபர் என்னை அழைத்து வர மறுத்து விட்டாரே! ஈழகேசரி இந்த ஊர்த் தபாற் கந்தோர் ஆசாமிகளின் தவறுதலால் அப்படிப் பிந்த நேரிட்டது. இனிமேல் அப்படி நேராதவாறு பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தவாரம் 7 ம் தேதி உமது பிறந்த நாட் கொண்டாட்டத்தில் இதை நீர் வாசிக்கப் போகிறீர்! தாத்தாவின் அநேகம் ஆசீர்வாதங்களைப் பெறக் கடவீர். கட்டுரைகள் கட்டாயம் பிரசுரிக்கப்படும். மாமா அப்படிச் சொன்னதற்கு என்பேரால் ஒரு 'கிள்ளு' கொடும்!

சி. ஆறுமுகம் (184) உமது படம் கிடைத்தது. மிகவும் வேடிக்கையாயிருக்கிறது! மலரில் பிரசுரிக்கலாம்

புதிய அங்கத்தவர்
(முற்றொடர்)

255. ஆ. நமசிவாயம் 257. N. இராமையா
256. க. சுப்பிரமணியம் 258. அ. மகேந்திரன்

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய"த்தி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டி' யுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் வருடம் மேமீ 7உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது